செ.வெ.எண்: 27/ஜூன் நாள்: 13.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## 8 வருவாய் வட்டங்களில் உள்ள 400 வருவாய் கிராமங்களுக்கு 1425-ஆம் பசலிக்கான வருவாய் தீர்வாயக் கணக்குகளின் தணிக்கை நடைபெற உள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 8 வருவாய் வட்டங்களில் உள்ள 400 வருவாய் கிராமங்களுக்கு 1425 - ஆம் ஆண்டு வருவாய்த் தீர்வாயக் கணக்குகள் 15.06.2016 முதல் 24.06.2016 வரை கீழ்க்கண்டவாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் தினசரி காலை 10.00 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஜமாபந்தி தீர்வாய தணிக்கை அலவலர்களால் தணிக்கை நடைபெற உள்ளது.

| வ.எண் | வட்டம் | ஜமாபந்தி தீர்வாய தணிக்கை அலுவலர் | தணிக்கை நாட்கள் |
|---|---|---|---|
| 1. | பரமக்குடி | **மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம்** | 15.06.2016 முதல் 17.06.2016 வரை மற்றும் 21.06.2016 முதல் 24.06.2016 வரை (7 நாட்கள்) |
| 2. | கடலாடி | **மாவட்ட வருவாய் அலுவலர், இராமநாதபுரம்** | 15.06.2016 முதல் 17.06.2016 வரை மற்றும் 21.06.2016 முதல் 23.06.2016 வரை (6 நாட்கள்) |
| 3. | முதுகுளத்தூர் | **சார் ஆட்சியர், பரமக்குடி** | 15.06.2016 முதல் 17.06.2016 வரை மற்றும் 21.06.2016 முதல் 23.06.2016 வரை (6 நாட்கள்) |
| 4. | திருவாடானை | **வருவாய் கோட்டாட்சியர், இராமநாதபுரம்** | 15.06.2016 முதல் 17.06.2016 வரை மற்றும் 21.06.2016 முதல் 24.06.2016 வரை (7 நாட்கள்) |
| 5 | கமுதி | **மாவட்ட வழங்கல் அலுவர். இராமநாதபுரம்** | 15.06.2016 முதல் 17.06.2016 வரை மற்றும் 21.06.2016 மற்றும் 22.06.2016 (5 நாட்கள்) |
| 6 | இராமநாதபுரம் | **மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், இராமநாதபுரம்** | 15.06.2016 முதல் 17.06.2016 வரை மற்றும் 21.06.2016 (4 நாட்கள்) |
| 7. | இராமேஸ்வரம் | **உதவி ஆணையர் ( ஆயம்), இராமநாதபுரம்.** | 15.06.2016 ( 1 நாள்) |
| 8. | கீழக்கரை | **தனித்துணை ஆட்சியர் (சி.தி.அ) இராமநாதபுரம்.** | 15.06.2016 முதல் 17.06.2016 ( 3 நாட்கள்) |

மேற்கண்ட தேதிகளில் இராமநாதபுரம் மாவட்டத்தின் எட்டு வட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள், வருவாய் தீர்வாயக் கணக்குகளில் தணிக்கை நடைபெறும் நாட்களில் கலந்து கொண்டு பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்